முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1534

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.12.2023,** திங்கட்கிழமை

1. ஞான சொரூபமே அரங்கா
   ஞானிகளின் ஒட்டுமொத்த வடிவே
   ஞான யுகம் படைக்க வந்த குரு அரங்கனே
   ஞாலமதில் உந்தனை போற்றி இனிதே
2. இனிதே சுப்ரமணியர் யானும்
   இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 ம் நாள், 11.12.2023, திங்கட்கிழமை)
   கனிவேலவன் என் மகா சக்தி உன்னுள்
   கருணைகொண்டு சூட்சுமமாய் நிரம்பி இருக்க
3. இருக்கவே அரங்கன் உன் வழி இந்த உலகுக்கு
   என்பலம் உணர்த்தப்படுமப்பா
   அப்பனே உன் தொண்டர்படை கொண்டு
   இந்த உலகுக்கு மாற்றம் நிகழ்த்துவனே்
4. ஒப்புகொண்டு உன்வழி வருபவரெல்லாம்
   உலகத்தில் ஞானிகளாக மாற்றம் பெற அருள்புரிவேன்
   அருளாக அறமாக அனைத்து மகா சக்தியாக
   அரங்கன் உன் ஓங்காரக்குடிலில் யானிருந்து
5. வரமாக மக்களுக்கு வழங்கி வருகின்றேன்
   வையகத்தில் உன் தீட்சை ஏற்றால் போதும்
   போதுமப்பா உலகோர் புண்ணியபலத்தோடு
   பிரணவ மகா சக்தி பலம் கூடி
6. சரவணச்சுடரின் தரிசனத்தின் வழி
   சகலருக்கும் என் காட்சி உறுதியாகும்
   உறுதிதந்து உன் ஞானமாக
   உறுதி தந்து உலகமெங்கும் உன் தர்மமாக

7. ஆறுமுகன் யான் வலம் வருகின்றேன்
அப்பனே இதை அறிந்து உணர்ந்து
அகிலத்தார் உன்வழி வந்தால் போதும்
உலகுக்கு மாற்றம் சடுதி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–